<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 150/2009</u>

பெயர் : பாலகிருஷ்ணன்
சாட்சி – பி.வா.சா–4 நாள்: 20.07.2026

---

**<u>குறுக்கு விசாரணை (16, 17, 19 பிரதிவாதிகள் தரப்பு)</u>**

1. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அவர்களது தாயார் உயிருடன் இருந்த காலத்திலேயே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களது திருமணத்திற்கு பின்னர் தாவா 2வது அயிட்ட சொத்திலேயே தனித்தனியாக குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கந்தசாமி பெயருக்கு எனது தாயார் நாகம்மாள் ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தினை கடந்த 27.12.1990 தேதியில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்மெண்ட் ஆவணம் எழுதும் போது நான் உடன் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் விவரங்களை எனது தாயார் சொல்லி அதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எனது முன்னிலையில் தான் எனது தாயார் கைரேகை வைத்தார் என்றால் சரிதான். அவர் கைரேகை வைக்கும் போது நான் பார்த்தேன். 27.12.1990 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் நானும் ஒரு சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். நானும், மற்றொரு நாச்சிமுத்து கவுண்டர் என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டோம். நாங்கள் கையெழுத்து போட்டதை எனது தாயாரும் பார்த்தார். என்னிடம் காட்டப்படும் 27.12.1990 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் கடைசி பக்கத்தில் காணப்படும் கைரேகை எனது அம்மா போட்டது தான். மேலும், பாலகிருஷ்ணன் என்ற முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து நான் போட்டது தான். ( **27.12.1990 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் கடைசி பக்கத்தில் காணப்படும் கைரேகை பி.வா.சா.ஆ.30 ஆகவும், பாலகிருஷ்ணன் என்ற முதலாவது சாட்சி கையொப்பம் பி.வா.சா.ஆ.31 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது.** )

3. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எந்த தேதியில் பதிவுக்கு கொடுக்கப்பட்டது என்றால் 19.04.1991 தேதியில் கொடுக்கப்பட்டது. பதிவு செய்யும் போதும் நானும், மேற்படி நாச்சிமுத்து கவுண்டரும் எனது அம்மாவுடன் சென்றோம். சார்பதிவாளர் அலுவலகத்திலும் எங்கள் முன்னிலையில் எனது அம்மா சார்பதிவாளர் முன்பாக கைரேகை வைத்தார். நாங்கள் இருவரும் அதனை பார்த்தோம். சார்பதிவாளர் முன்பாகவும் நானும் நாச்சிமுத்து கவுண்டரும் அதில் சாட்சியாக நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் கையெழுத்து போட்டோம்.

4. என்னிடம் காட்டப்படும் 27.12.1990 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் முதல் தாளின் பின்பக்கத்தில் காணப்படும் கைரேகை எனது அம்மா போட்டது தான். சாட்சியாக நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் உள்ள 2 வது கையொப்பம் நான் போட்டது தான். ( **27.12.1990 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் முதல் தாளின் பின்பக்கத்தில் காணப்படும் கைரேகை பி.வா.சா.ஆ.32 ஆகவும், நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் காணப்படும் பாலகிருஷ்ணன் என்ற இரண்டாவது சாட்சி கையொப்பம் பி.வா.சா.ஆ.33 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது.** ) எனது அம்மா சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் கையொப்பம் செய்யும் போதும் நான் உடன் இருந்தேன். 3ம் பிரதிவாதி பெயருக்கும் எனது தாயார் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்தினை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

5. எனது தாயார் இறந்த பின்னர் தான் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். நான் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயருக்கு எனது தாயார் எழுதி வைத்துள்ள உயில் மற்றும் தான செட்டில்மெண்ட் ஆவணங்களின் படி அவரவருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனித்தனியே அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களது சொத்துக்களில் தறிகுடோன் வைத்து தொழில் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.

6. வாதிகள் எனது தாயார் உயிருடன் இருந்த போது நல்லது கெட்டதுகளில் பங்கேற்க வந்து செல்வார்கள் என்றால் சரிதான். எங்கள் பெயருக்கு சொத்து எனது

தாயார் கொடுத்தது பற்றி வாதிகளுக்கு அப்போதே நன்கு தெரியும் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் சொத்துக்களை வாங்கி உள்ளார்கள் என்றால் சரிதான். சொத்தினை வாங்கிய பின்னர் 16, 17 மற்றும் 19 பிரதிவாதிகள் அவர்கள் வாங்கிய சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களில் அவர்கள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

**10 முதல் 12, 25 மற்றும் 26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. 3ம் பிரதிவாதி தரப்பில் முன்னிலை இல்லை. வாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

KALIDASAN VEERASAMY

Digitally signed by KALIDASAN VEERASAMY
Date: 2026.07.20 18:11:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.